ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1450/23 - 2006 ජූනි 22 වැනි බ්‍රහස්පතින්දා - 2006.06.22

1450/23 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பீ. 2/78

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய அச்சட்டத்தின் 140 ஆம் பிரிவின்கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
2006, யூன் 05.

**கட்டளைச் சட்டம்**

1. இக்கட்டளைச் சட்டம் 2006 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, தொழிலாளர் கல்வி நிறுவக (திருத்தக்) கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், 2006.02.20 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 140 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழான கட்டளைச் சட்டமொன்றாகக் கருதப்படுவதும் திருத்தப்பட்டவாறான 1979 திசெம்பர் 26 ஆந் தேதிய 68/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான 1979 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, தொழிலாளர் கல்வி நிறுவகக் கட்டளைச் சட்டம் இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(அ) அதன் பந்தி 1 இல் "தொழிலாளர் கல்வி நிறுவகக் கட்டளைச் சட்டம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "மனிதவள மேம்பாட்டுக் கட்டளைச் சட்டம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அதன் பந்தி 3 இல் "தொழிலாளர் கல்வி நிறுவகம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "மனிதவள மேம்பாட்டு நிறுவகம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

3. "தொழிலாளர் கல்வி நிறுவகம்" என்பது பற்றிய குறிப்பீடு ஒவ்வொன்றும் அது அத்தகைய கட்டளைச் சட்டத்தில் அல்லது ஏதேனும் அறிவித்தலில், அறிவிப்பில், ஒப்பந்தத்தில், தொடர்பாடலில் அல்லது வேறு ஏதேனும் ஆவணத்தில் எங்கெங்கு காணப்படுகின்றதோ அங்கெல்லாம் எல்லா நோக்கங்களுக்காகவும் "மனித வள மேம்பாட்டு நிறுவகம்" என்பது பற்றிய குறிப்பீடொன்றாக வாசித்துப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

07-75


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.